செ.வெ.எண்: 14 நாள்:08.10.2020

பெரம்பலூர் மாவட்டம்

**பெரம்பலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்த அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலருமான திரு.அணில்மேஷ்ராம் இ.ஆ.ப., அவர்கள், தலைமையில மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வே.சாந்தா,இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

**அதன் விவரம் வருமாறு:**

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆலத்தூர், பெரம்பலூர், வேப்பந்தட்டை மற்றும் வேப்பூர் உள்ளிட்ட 4 ஒன்றியங்கள் மற்றும் பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சித் துறை, வேளாண்துறை, தோட்டக்கலைத்துறை, கல்வித்துறை மற்றும் பொதுப்பணித்துறை உள்ளிட்ட பல்வேறுத்துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வே.சாந்தா,இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலருமான திரு.அணில்மேஷ்ராம் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.10.2020) மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, பொதுப்பணித்துறை, கால்நடைபராமரிப்புத்துறை, கல்வித்துறை, வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை, சுகாதாரத்துறை, கூட்டுறவுத்துறை, சமூகநலம் மற்றும் சத்துணவுத்துறை என அனைத்து துறைகளின் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசின் திட்டப்பணிகள் குறித்த விபரங்களையும், திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து துறைவாரியாக விரிவாக கண்காணிப்பு அலுவலர் அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

அதனடிப்படையில் சுகாதார துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள், சிகிச்சை முறை, மருந்து பொருட்கள் இருப்பு குறித்தும், வேளாண்துறை மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து, விரிவாக ஆய்வு மேற்கொண்ட மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் மாவட்டத்தில் பயிர் செய்யப்பட்டுள்ள மொத்த பரப்பளவு குறித்தும், பயிர் வகைகள் குறித்தும், மேலும் விவசாயிகளுக்கு தேவையான வேளாண் கருவிகள், உரங்கள் இருப்புக் குறித்தும், மேற்கொள்ளப்பட்டுள்ள நலத்திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சோலார் மின்வசதியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டம், கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், மேலும், ஊரகப் பகுதிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலம் தூர் வாரி ஆழப்படுத்துதல் மற்றும் கரைகள் பலப்படுத்துதல் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும் வளர்ச்சித் துறையை சார்ந்த அலுவலர்களிடமும், அதனைத்தொடர்ந்து பள்ளிக் கல்வித் துறை, சமூக நலன் மற்றும் சத்துணவுத் துறை, சிறப்பு திட்ட செயலாக்கம், உணவு பாதுகாப்பு மற்றும் வழங்கல் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வாயிலாக பெரம்பலூர் மாவட்ட மக்களின் வளர்ச்சிக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் நிலை குறித்தும், அதனால் பயன் பெற்று வரும் பயனாளிகளின் எண்ணிக்கைகள் குறித்தும், வருவாய்த்துறையின் சார்பில் வழங்கப்பட்டு நலத்திட்டங்கள் குறித்தும் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

அதனைத்தொடர்ந்து வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தேவையூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.17.64 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிட கட்டுமான பணியினையும், எறையூர் ஊராட்சியில் தோட்டக்கலைத்துறையின் சார்பில் ரூ.1.55 இலட்சம் மதிப்பீட்டில் சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்ட வேளாண் நிலத்தினையும் பார்வையிட்டு விவசாயிகளிடம் இதன் மூலம் சேமிக்கப்படும் நீரின் அளவு, மகசூல் அளவு குறித்தும் இதனை பயன்படுத்தும் முறையினையும் எடுத்துக்கூறி தொடர்ந்து பராமரித்து பயன்படுத்திட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி நிஷா பார்த்திபன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ராஜேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி கே.லோகேஷ்வரி, வருவாய் கோட்டாட்சியர் திரு.சக்திவேல், வேளாண் இணை இயக்குநர் திரு.கருணாநிதி, இணை இயக்குநர் மருத்துவ நலபணிகள் மரு.திருமால், துணை இயக்குநர் தோட்டக்கலைத்துறை திருமதி ஏ.ஜி.பாத்திமா, துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.கீதாராணி உள்ளிட்ட அனைத்துத்துறைகளைச் சேர்ந்த உயர் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**